பார்த்தவர்கள் : 053494

○
○

○ **தேசம்நெற்**

[தேசம்]

--[தேசம்நெற் ஆசிரியர் குழு]

**Feb**

**17**

# [கழக முக்கிய உறுப்பினர்கள் வெளியேற்றம்! சுழிபுரம் படுகொலைகள்! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 2 : ஜெ ஜென்னி]

≡ Category: [கட்டுரைகள்/ஆய்வுகள்], [ஜென்னி ஜெ] | ≅

*எனது இப்பதிவு முயற்சிக்கு பின்னூட்டங்களாகவும் தொலைபேசி ஊடாகவும் மின் அஞ்சல் ஊடாகவும் ஊக்கமளித்து வருகின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இப்பதிவினை மேற்கொள்ள ஆரம்பித்த பின்னர் பலரும் தொடர்புகொண்டு தகவல்களைத் தருகின்றனர். தேவையேற்படும் போது அவற்றினை அவர்களின் பதிவுகளாகவே பதிவு செய்கிறேன். சிலருடைய பெயர்கள், சில சம்பவங்கள் தவறவிடப்பட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். தகவல்களுக்கு நன்றி. தொடர்ந்தும் இந்த உண்மைகளைத் தேடும் முயற்சிக்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன். (என்னுடைய முன்னைய பதிவுகளுக்கு:* [நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! : நிலா (முன்னாள் கழகப் போராளி)], [தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 1 : ஜெ ஜென்னி]*)*

**உறுப்பினர்களின் வெளியேற்றமும் எனது குழப்பமும்:**
பின் தளத்தில் இருந்து தளத்துக்கு வந்த நிலையில் என்னை அனுப்பி வைத்த எனது நண்பர் ஜான் மாஸ்ரரின் வெளியேற்றம் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பின்தள முரண்பாடுகளின் நிலைமைகளை தொலைத்தொடர்புகள் மூலம் சிறிது அறிந்து இருந்தாலும் அது மிக குழப்பகரமாகவே இருந்தது. வெளியேறுகின்ற ஜான் மாஸ்ரர் போன்றவர்கள் நீண்டகால நண்பர்கள். அதேசமயம் உமா மகேஸ்வரன் மற்றும் முக்கிய பொறுப்பில் இருந்தவர்களுடனும் எனக்கு நல்ல உறவு இருந்தது. எதனை யாரை நம்புவது யார் பொய் சொல்கின்றனர் என்ற குழம்பிய நிலையிலேயே நான் இருந்தேன்.

என்னுடைய அரசியல் தெளிவின்மையும் தனிமனித உறவுகளுக்கு வழங்கிய முக்கியத்துவமும் அதற்குக் காரணமாக இருக்கலாமா என்று கேள்வி இன்று ஏற்படுகின்றது. ஆனால் அன்று அவ்வாறாக ஆராயும் அரசியல் பக்குவம் இருக்கவில்லை. போராட்டத்துக்கு வந்த நாம் எதையாவது சாதித்தே ஆக வேண்டும் என்ற துடிப்பு மட்டுமே இருந்தது. எல்லாவற்றையும் சமாளித்து எமது இலக்கு நோக்கி நகரமுடியும் என்பதை மட்டுமே நம்புவதற்கு மனம் விரும்பியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நிலையில் தளத்திலும் மத்திய குழு என்று சொல்லப்பட்டவர்களிடையே ஒரு தெளிவில்லாத தன்மையும் காணப்பட்டது. எனவே எமது நிர்வாகக் கட்டமைப்புடன் உருவாகிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மகளிரின் எதிர்காலம் என்ன என்ற கேள்விக்குறி எழுந்தது.

குறுகிய காலத்திலேயே மீண்டும் பின்தளம் சென்று கழக உறுப்பினர்களின் வெளியேற்றம், சுழிபுரம் படுகொலைகள் உட்பட பல்வேறு விடயங்களையும் தெளிவுபடுத்த விரும்பினேன். பின் தளத்தில் வாசுதேவாவை அலுவலகத்தில் சந்தித்த நேரம், "ஜென்னி நீ இன்னும் ஓடவில்லையா? இன்னும் கழகத்தில் நிற்கின்றாயா?" என்று குதர்க்கமாக கேட்டார்? அப்போதுதான் 'வாசு அண்ணா இங்கு என்ன நடக்கின்றது? ஏன் இப்படி வெளியேற்றங்கள் நடக்கின்றது' எனக் கேட்டேன். அதற்கு தெளிவற்ற பதிலே கிடைத்தது.

அதன்பின் சென்னையில் செயலதிபரை சந்தித்தேன். எனது எல்லா சந்தேகங்களையும் கேட்டேன். ஜான் மாஸ்ரரின் வெளியேற்றம் எனக்கு பெரும் தாக்கத்தை கொடுத்ததால் உண்மையை விடுத்து விடுத்து கேட்டேன். கேள்விகளை யாரிடமும் கேட்பதற்கு நான் தயங்கியதில்லை. அதனால் செயலதிபர் கோபம் அடைந்த நிலையில், "ஓடியவர்களைப் பற்றி காரணம் தேடாமல், இருக்கின்ற கழகத்தை பாரும். போபவர் போனால், நான் என்ன செய்ய முடியும்" என்று என்னையே திருப்பிக் கேள்விக்கு உட்படுத்தினார். அவருடைய பதில் எனக்கு குழப்ப கரமானதாகவே இருந்தது.

**சுழிபுரம் கூட்டுப் படுகொலை:**
நான் முதற் தடவையாக பின்தளத்தில் இருந்து தளம் திரும்பி, மாதகலில் இறங்கவும் சுழிபுரத்தில் கந்தசாமி குழுவினரால் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஆறு பேர் மிக மோசமாக கொல்லப்பட்ட விடயம் பூதாகாரமாகியது. (இக்கொலையை கழகம் தான் செய்ததென்று அன்று நான் அப்போது அறிந்து இருக்கவில்லை.) சுழிபுரம் ஆறு பேர் கொலைகளும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் பதட்ட நிலையும் செயலதிபர் உமாமகேஸ்வரன், கந்தசாமி உட்பட்ட முக்கிய நபர்களை தளத்திற்கு போன வேகத்திலேயே பின் தளத்திற்கு திரும்ப வைத்தது. இப்படுகொலைகள் வரை தனித் தனியாக சில கொலைகள் விடுதலை இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கூட்டுப்படுகொலை இதுவென நினைக்கிறேன். இது கழகத்தை மிக மோசமாகப் பாதித்தது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கோட்டையாக விளங்கிய சுழிபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலைகள் அம்மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. பிற்காலங்களில் இப்பகுதியில் ஆதரவு தளர்வதற்கும் இப்படுகொலைகளே காரணமானது. சுழிபுரம் வடக்கம்பிறை அம்மன் கோயில் முன்னரேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுக்கூட்டம் 1976ல் கூட்டப்பட்டு தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் இப்பகுதி கழகத்தின் முக்கிய ஆதரவுத்தளமானது. உமா மகேஸ்வரன் அ அமிர்தலிங்கம் ஆகியோருக்கு இருந்த நல்லுறவும் அதற்கொரு காரணம். அதற்கும் மேலாக சந்ததியார் போன்றவர்களின் கடுமையான உழைப்பு.

கழகத்தின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் சுழிபுரம் முக்கியமானது. சந்ததியார், சுந்தரம், தடியன் ரவி, மொக்கு மூர்த்தி (சுழிபுரம் என்றே நினைக்கிறேன்.), செங்கோடன், சாமி (சந்ததியாரின் மருமகன்), கந்தசாமி, ஆச்சிராஜன் (உமா மகேஸ்வரனின் படுகொலையைத் திட்டமிட்டவர். கடந்த ஆண்டு இயற்கை மரணத்தை தழுவினார்.), ஆர் ஆர் (தற்போதைய புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்) ஆகியோர் சுழிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களே.

சுழிபுரம் படுகொலைகள் பற்றி எமது தள பொறுப்பாளர்களிடம் கேட்டால் எவருக்கும் சரியான பதில் சொல்ல முடியவில்லை. பின்தள கழகமோ எல்லாவற்றையும் மறுத்தது. இப்படுகொலைகளால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கசப்புணர்வால் அரசியல் வேலை செய்யும் நாம் எல்லோருமே குழப்பம் அடைந்து இருந்தோம்.

இந்நிலையில் எனது சந்தேகங்களை தீர்க்க மீண்டும் பின்தளம் சென்றேன். சென்றதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரத்தநாடு, சென்னை பகுதிகளில் முதலில் கந்தசாமியைச் சந்தித்தேன். சுழிபுரம் கொலைகள் பற்றி கேட்டதற்கு முடிந்த முடிவாக இதற்கும் தங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றார்.

நான் இவற்றை நம்பாமல், அப்படிச் செய்து இருந்தால் உடனே தவறுகளை ஏற்றுக்கொண்டு பொதுமக்களிடம் நேரடியாக மன்னிப்புக் கேட்கச் சொல்லியும் தள கழக பிரிவுக்கு இது பற்றி சுற்றறிக்கை விடச் சொல்லியும் வலியுறுத்தினேன். ஆனால் கந்தசாமி தாம் அப்படிச் செயயவில்லை என்று நூறுவீதம் மறுத்தார். அதற்கு மேல் என்னால் எதனையும் பேசமுடியவில்லை. நான் அன்று கழக உயர் மட்டத்தில் வைத்த நம்பிக்கையால் இதனை நம்பினேன்.

செயலதிபரிடம் சுழிபுரம் படுகொலைகள் பற்றி வாதிட்டதிலும் எந்த உண்மையும் கிடைக்கவில்லை. ஆயினும் தலைமை சொன்னவற்றை வேத வாக்காக நம்பினேன். தலைமை மீது இருந்த கண்மூடித்தனமான நம்பிக்கையும் காரணம் என்பதை இன்று உணர்கிறேன்.

மேலும் செயலதிபருடன் மகளீருக்கான பயிற்சிகள் பற்றிப் பேசினேன். 'இப்போதைய முகாமிற்கான வசதிகள் குறைவாக இருப்பதையும் அதுவும் மகளீர் பயிற்சிக்கு பாதுகாப்பான, இந்தியா கிராமங்களில் விமர்சனத்திற்கு வராத மாதிரியான ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும்', எனக் கேட்டுக்கொண்டேன். அதற்குப் பதிலளித்த செயலதிபர், "மகளீரைத் தெரிவு செய்யுங்கள். சில மாதத்தில் மேலதிக விபரங்களை அறிவிக்கின்றேன்" என உறுதி அளித்தார். பின் சிறிய கையடக்க ரெக்கோடிங் கருவியையும் அதனுடன் நாலு கசெட்டையும் தந்து, "நீர் கடலால் இப்படி ஓடித்திரிய வேண்டாம். என்ன விடயம் என்றாலும் இதனூடாக எனக்கு செய்திகளை தொலைத்தொடர்பு நிலையத்தின் மூலம் அனுப்பிவிடும்" என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

**மீண்டும் தளத்தில் மகளீர் இராணுவக் கட்டமைப்பு வேலைகள்:**
நான் பின்தளத்தில் இருந்து முதற்தடவை தளத்துக்கு திரும்பும் போது ஜான் மாஸ்ரர் எனக்கு சில பொறுப்புகளை ஒப்படைத்து வழியனுப்பி வைத்தார். இம்முறை பின்தளத்தில் இருந்து தளம் திரும்பும் போது செயலதிபர் பொறுப்பை ஒப்படைத்து வழியனுப்பி வைத்தார். ஜான் மாஸ்ரர் கழகத்தில் இருந்து வெளியேறிவிட்டார்.

நானும் நாட்டிற்குத் திரும்பி மகளீர் அமைப்பு வேலைகளில் சக தோழிகளுடன் தீவிரமாக ஈடுபட்டேன். ஆயினும் பின்தளத்திற்கு சென்று வந்ததில் சுழிபுரம் ஆறு கொலை கழகம் செய்யவில்லை என்றே முழுமையாக நம்பி பிரச்சாரத்தில் இறங்கினோம். ஆயினும் நாட்டில் ஜான் மாஸ்ரர் உட்பட்ட திருமலை தோழார்களின் வெளியேற்றம் எமக்கு பின்னடைவுகளைத் தந்தாலும் ஏதோ எமது அரசியல் ஓடிக்கொண்டு இருந்தது.

இந்த நிலையில் மகளீரின் ராணுவப் பயிற்சி அழுத்தமே எனக்கு அதிகமாக இருந்தது. நாம் தளமகளீர் அமைப்பிற்குள் முடிவெடுத்து, ஒன்பது மாவட்டங்களிலும் அரசியல் தகுதியின் அடிப்படையில் முழுநேர சிறந்த பங்காளர்களை ராணுவப் பயிற்சிக்கு இணைப்பது என்று முடிவெடுத்தோம். இதற்காக ஒன்பது மாவட்டத்திற்கான பொறுப்பாளர்களுடனும் கூடிப் பேசப்பட்டது.

இதன் போது மூதூர் திருமலைக்கு மகளீர் அமைப்பு பொறுப்பாளராக குப்பிளானைச் சேர்ந்த சக்தி என்ற மகளிர், செல்வனின் விசேட பொறுப்பில் அனுப்பப்பட்டார். காரணம் திருமலையில் எப்போதும் அரச பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதால் உடனடியாக உள்ளிட்டு எந்த வேலையும் செய்ய முடியாது. மூதூர் பகுதிகளில் இருந்து கொண்டே எதுவும் செய்ய முடியும். எனவே இப்பிரதேச வேலைத்திட்டம் எமக்கு என்றும் ஆபத்தானதால் பூரண ஒத்துழைப்பை கொடுக்கச் சொல்லி இந்த சக்தியிடம் செல்வனுக்கு கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

**தள நிர்வாகக் கூட்டமும் மத்திய குழுவின் குழப்பமும்:**
தள நிர்வாகக் கூட்டம் பெரும்பாலும் மூன்று மாதத்திறகு ஒருமுறை நடைபெறும். இதில்

கழகத்தின் நாட்டிலுள்ள அனைத்து மத்திய குழு உறுப்பினர்கள் உட்பட அனைத்து மாவட்ட அரசியல் பொறுப்பாளர்கள், ராணுவப் பொறுப்பாளார்கள், தள மகளிரமைப்பு பொறுப்பாளர், தள மாணவர் அமைப்பு பொறுப்பாளர், தள தொழிற்சங்க பொறுப்பாளர் என பல முக்கிய உறுப்பினர்கள் மூன்று நாட்கள் கூடி சந்திப்பு நடைபெறும். காரசாரமான விவாதங்களும் நடைபெறும். அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த சந்திப்பில் நான் தான் ஒரு பெண்ணாக மட்டும் இருப்பேன். பிற்பட்ட காலத்தில் நேசன் யாழ்மாவட்ட பொறுப்பை விட்டு விலகிய நேரம் வனிதா யாழ் மாவட்ட பொறுப்பாளராக இருந்தார். எனவே ஒரு கூட்டத்திற்கு இவர் வந்திருந்தது குறிப்பித்தக்கது.

இச்சந்திப்புக்களுக்கு ராணுவப் பொறுப்பாளர் பக்தனோ, செல்வனோ, அகிலனோ பாதுகாப்பைக் காரணம் காட்டி வருவதில்லை. ஆயினும் மட்டக்களப்பு, அம்பாறையில் இருந்து தயாபரன், ரகு முடிந்த நேரம் வந்து போனார்கள். வவுனியா - மன்னார் ராணுவப் பொறுப்பாளர்கள் இவற்றில் பெரிதாக நாட்டம் காட்டவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இத் தள நிர்வாகக் கூட்டத்தில் சுழிபுரம் ஆறுகொலை, சந்ததியாரின் வெளியேற்றம், ஜான் மாஸ்ரரினதும் சில திருமலை இளைஞர்களின் வெளியேற்றம் எல்லாம் விடிய விடியப் பேசப்பட்டு, மத்தியகுழு உறுப்பினர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டாலும் எவரிடம் இருந்தும் தெளிவான பதில் வராது. நானும் பின்தளத்திற் சென்று இப் பிரச்சனைகள் சம்பந்தமாக கேட்டு எனக்குத் தரப்பட்ட பதில்களையும் இங்கு வைத்தேன். மொத்தத்தில் எல்லோருக்கும் இப்பிரச்சனைகள் பற்றி குழப்பமான நிலையே இருந்தது.

மத்திய குழு உறுப்பினர் பெரிய முரளி நீண்ட மௌனமே சாதித்தார். அவர் வாய்திறந்து சொல்வதுவும் எமக்குப் புரியாத சூட்சுமமான பதில்களாக இருக்கும்.

ஈஸ்வரனோ என்றும் உச்சகட்ட நிலையில் நின்று கத்தி மற்றவர்களை வாய்திறக்கவிடாமல் செய்வார். அவர் தான் தான் கழகத்தின் ஆணிவேர், அச்சு பாகம் என்று நிரூபிப்பதிலேயே குறியாக இருப்பார். மேலும் கிழக்கு அரசியலும் மற்றவர்களுக்குமான குற்றப் பத்திரிகையையும் வாசிக்கத் தவறமாட்டார்.

குமரனோ அப்படியும் இருக்கலாம் இப்படியும் இருக்கலாம் எனச்சொல்லி எதற்கும் முகுந்தனோடு நான் பேசுகின்றேன் என்று உறுதிமொழி கூறுவார்.

பல வெளிவட்டங்கள் பல்கலைக்கழக வட்டங்களில் தொடர்புகளை கொண்ட அசோக், “இவற்றை நாம் விட முடியாது. எல்லோரும் என்னைப் பார்த்து கேட்கின்றனர். இது சரிவராது. எல்லோரையும் அம்பலப்படுத்த வேண்டும்” எனக் கூறி வழக்கம் போல் அறிக்கை எழுதி அரசியல் செய்ய வேண்டுமெனக் குறிப்பிடுவார்.

இப்படியான மத்திய குழுவைத் தாண்டி தளக்குழு தான் எதை எதிர்பார்க்க முடியும். பொதுவில் எல்லோருக்கும் எல்லோரைப் பற்றியும் சந்தேகங்கள் தான் வளர்ந்தது. யார் யாரினது சார்பு? எவர் யாருடன் சேர்த்தி? என்ற உள்ளூரப் பயத்துடனேயே செயற்பட்டோம். ஏனெனில் ஒவ்வொருவருக்குப் பின்னாலும் ஒரு அரசியல், யார் யாரை நம்புவது? ஒவ்வொரினதும் பின்புலம் என்ன? என ஒவ்வொருவரும் குழம்பி அல்லது குழம்பிக் கொள்வதிலேயே காலம் நகர்ந்தது.

ஆனால் மகளீர் அமைப்பின் வேலைத்திட்டமோ எந்த விமர்சனங்களைப் பார்க்காமல் ராணுவப் பயிற்சிக்கான தெரிவுகள் அதன் குறிக்கோளோடு சீரான நிர்வமைக்கப்பட்ட கட்டமைப்புடன் இருந்தது. ராணுவப் பயிற்சி தெரிவு என்பது, தீவிர அரசியல் வேலைத்திட்டத்தின் திறமையையே மையப்படுத்தியதால், எமது வேலைத்திட்டத்தில் பெரிதாக ஆட்டம் காணப்படவில்லை. எனவே எமது மகளீர் அமைப்பு வேலைத் திட்டத்தின் சிறப்பைக்காட்டி பின்தள ராணுவப் பயிற்சிக்கான உடனடி ஆயத்தத்தை மேற்கொள்ளும் படியும், எமது மகளீரின் செயல்திறனை விலாவாரியாக விபரித்தும் இந்த மகளீர் அமைப்பிற்கான யாப்பை

www.tamilarangam.net

தயாரிப்பதற்கான சில வேலைத்திட்டம் தொடங்கி இருப்பதையும் செயலதிபருக்கு செய்தியாக அறிவிக்க விரும்பினேன். அவர் தந்த ரெக்கோடிங் கருவி கசெட்டில் இந்த விடயங்களைக் பதிந்து, அந்த கசெட்டை தொலைத்தொடர்பு நிலைய தொடர்பாளர்களால் செயலதிபருக்கு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பினேன்.

**சுழிபுரம் படுகொலைகளின் உண்மை எனக்கு தெரியவந்தது:**
பின்பு சத்யா ஒருநாள் திடுக்கிடும் சம்பவமாக ஒரு செய்தியை கொணர்ந்தார். அதாவது சுழிபுரம் ஆறுகொலை கழகத்தாரால் தான் செய்ததென்று தன்னால் நூறு வீதம் நிருபிக்க முடியும் என்றும் சில தகவலைத் தந்து, எமது உயர் மகளிர் அமைப்பிற்குள் கதைக்கப்பட்டது. இதில் நாம் எல்லோரும் மிக ஆத்திரப்படடோம். உடனேயே மென்டிஸிடம் சென்று விடயத்தை தெரியபடுத்தினோம்.

அப்போது மென்டிஸ் சாதாரணமாகவே தமக்கு “இது முதலே தெரியும்” என்றும், “செயலதிபர் வந்த நேரம் பாதுகாப்புக்காக என்று, கந்தசாமி குழுவால் செய்யப்பட்டது” எனவும் கூறினார். “கழக அனுமதி இல்லாமல் எதையும் வெளியிட முடியாததால் நானும் சேர்ந்து மறைத்தேன” எனவும் சொன்னார். அப்போது ‘இங்குள்ள மத்திய குழு உறுப்பினர்களுக்கு தெரியுமா?’ என்று கேட்க, “கண்டிப்பாக தெரியாமல் இருக்காது. ஆனால் எதையுமே யாரும் ஒததுக்கொள்ள மாட்டார்கள்” எனச் சொன்னார். அப்போ, “அண்மையில் நடந்த தள நிர்வாக குழுகூட்டத்தில் இதுபற்றி நான் உட்பட பலர் இதுபற்றி கேட்டபோது, நீர் ஏன் இதை வெளிப்படுத்தவில்லை”, எனக் கேட்டதற்கு “என்னைவிட மத்திய குழு உறுப்பினர் எல்லாம் தெரிந்த நிலையில் இருக்கும் போது, நான் எப்படி வாய் திறக்க முயும். நான் இதனால் தான் கூட்டங்களில் மௌனமாக இருக்கிறனான். மத்திய குழு பிரச்சனையை கொண்டு வந்தால் தான் நான் எதனையும் பேசமுடியும்” என்றார்.

மென்டிஸிடம் இதுபற்றி தர்க்கித்துவிட்டு, குமரனிடமும் என்ன பதில் வரும் என்று எனக்குத் தெரிந்தது. தொடர்ந்தும் இவர்களை நம்ப முடியுமா? என்ற கேள்வியும் எழுந்தது.

**செயலதிபருடன் முரண்பாடு:**
நான் நேரடியாகவே செயலதிபருடன் கதைத்து முடிவெடுக்க மீண்டும் ஒருமுறை பின்தளம் சென்றேன். சென்னை அலுவலகத்தில் செயலதிபரைச் சந்தித்தேன். அதன்போது சுழிபுரம் கொலையால் நாட்டில் கழகத்திற்கு உள்ள அவப்பெயரை எடுத்துக் கூறினேன். ‘மேல்மட்டம் எல்லாவற்றையும் மறைத்து மக்கள் மத்தியில் வேலை செய்யும் எங்களை சிக்கலில்மாட்டி வருகின்றீர்கள். அதுவும் இக்கொலை தற்பாதுகாப்பு என்ற பெயரில் மிக அகோரமாக நடந்ததுள்ளது. எமது மகளீரிடம் இதனை நிருபிக்க சரியான தடயங்கள் கிடைத்துள்ளன’ என்று குற்றச்சாட்டுகளை வைத்தேன். ‘இப்படுகொலைகளை இனியாவது உரிமை கோரி மன்னிப்பு கேட்க வேண்டும்’ எனவும் கேட்டேன். ‘அப்படிச் செய்தால்தான் கழகம் தொடர்ந்து நிற்க முடியும். இல்லாவிட்டால் அடுத்த நகர்வை ஏற்படுத்த முடியாது’ என்பதையும் செயலதிபரிடம் தெரிவித்தேன்.

‘காந்தனின் (ஜான் மாஸ்ரரின்) வெளியேற்றமும் எனக்கு இன்னும் அதிர்ச்சியாக உள்ளது. நீங்கள் இல்லாத போது இத்தனை பொறுப்புக்களை வகித்த காந்தனுக்கு நடந்த மர்மம் என்ன? சந்ததியார் கூட ஏன் நான் பின்தளம் வந்த காலத்தில் இருந்து கவனித்ததில் செயலிழந்து வெளியேறி நிற்கின்றார்’ என்பதைச் சுட்டிக்காட்டி பலவற்றையும் கேட்டேன். ‘நான் தொலைத்தொடர்பிற்குள் நிற்கும் போது என்னால் உணர முடியவில்லை. ஆனால் தற்போது மக்கள் மத்தியில் செயற்படும் போது நாம் பந்தாடப்படுகின்றோம். சுழிபுரம் கொலை போல் எல்லாம் மறைக்கப்டுகின்றதா?’ என்ற அடிப்படையில் தர்க்கித்தேன்.

“இப்படியெல்லாம் குழம்பாமல் நாட்டில் சென்று ஒழுங்காக வேலை செய்யும். எல்லாம் விரைவில் சரிவரும். யார் ஓடினாலும் கழகம் இருக்கும். நான் இருப்பேன். எனவே நீர் பெரிதாக எதையும் அலட்டிக்கொள்ளாதீர்” என்ற தெளிவில்லாத ஒரு பதிலே செயலதிபரிடம் இருந்து வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்து எமது மகளீரமைப்பு விடயங்களை செயலதிபருடன் உரையாடினேன். 'உங்களுக்கு அனுப்பிய கசெட் கிடைத்ததா?' என வினாவினேன். உடனே அவரின் மேசை லாச்சியில் இருந்து நான் அனுப்பிய கசெட்டை எடுத்து மேசையில் சுழட்டி வீசினார். நான் அதிர்ந்து விட்டேன். வீசியவர், "இதில் என்ன செய்தியை இவ்வளவு அவசரப்பட்டு அனுப்பினீர். இதில் எதுவுமே முக்கிய செய்தியாக இல்லையே. வைரவருக்கு நாய் வாய்த்த கணக்கில் நீங்களெல்லாம் வந்து வாய்த்துள்ளீர்கள். என்னதான் அங்கு பண்ணுகின்றீர்கள்" என்று உதாசீனப்படுத்திப் பேசினார். ஏற்கனவே பல பிரச்சினைகளுடன் வாக்குவாதப்பட்ட நான் இந்த நிகழ்வாலும் திகைப்படைந்தேன். "மகளீரிற்கான ராணுவப் பயிற்சி எல்லாம் சரி. அதற்கான அலுவலைப்போய் பாரும்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

**நம்பிக்கையற்ற அரசியல் ஓட்டம்:**
இப்பதில்களுடன் நாட்டிற்கு உடன் திரும்பிய போது முழுவதுமாக அங்குள்ள மத்திய குழுவினர் மீது தான் எனக்கு கோபம் வந்தது. இவர்கள் எல்லாம் தெரிந்திருந்தும் இரட்டை முகத்துடன் வாழ்கின்றனர். எமக்கு எல்லாவற்றையும் மறைத்துள்ளனர். எமது மேல்மட்ட மகளிர் குழுவுடன் பிரச்சனைகளை கதைத்தேன். இதன்போது எம்மிடையேயும் முரண்பாடு வந்தபோதும் எதையும் உடன் தூக்கி எறிந்து குழப்பி விட்டு போக முடியாதளவு, எமக்கு பின்னால் உள்ள ஆயிரக்கணக்கான மகளீருக்குரிய கட்டமைப்பாடு எமக்கு இருந்தது. ராணுவப் பயிற்சிக்கான ஆயத்தங்கள் முடிந்த நிலையில் எமது செயற்பாடுகளும் இருந்ததாலும் நாம் ஆறு பேரும் தனிப்பட்ட நிலையில் நல்ல நண்பர்களாய் இருந்ததாலும் மகளீருக்குள் வெட்டியோடும் பண்புகள் இருக்கவில்லை. நாம் எமது அரசியல் வேலையை இழுத்துக்கொண்டு ஓடிக் கொண்டு இருந்தோம்.

இந்நிலையில் செயலதிபர் கசெட்டைத் தூக்கி எறிந்த விடயம் பற்றி தனிப்பட்ட முறையில் செல்வியிடம் (செல்வியும் நானுமே நீண்ட காலமாக ஒரு அறையில் நண்பிகளாகத் தங்கி இருந்தோம். அதனால் மனம் விட்டு கதைப்போம்.) கூறியதில் இந்த செயலதிபரின் கசெட் விடயத்தில் என்னிடம் இருந்து வேறு எதையோ எதிர்பார்த்து இருக்கின்றார் என்பதை நாம் உணர்ந்தோம். "நாம் எந்த குழுவாதத்திலும் மாட்டாமல் இருக்க வேண்டும்" என செல்வி அப்போது எச்சரித்து இருந்தார். அதனால் இனியும் என்னிடம் இந்த ரெக்கோடிங் கருவி இருப்பதில் எனக்கு உடன்பாடில்லை. சத்யா இலங்கை ராணுவ ரகசியங்களை சேகரிப்பதில் மென்டிஸ் உடன் வேலைத்திட்டத்தில் இருந்ததால் அவருக்குப் பயன்படும் என ரெக்கோடிங் கருவியையும் மிகுதி 3 கசெட்களையும் அவரிடமே கொடுத்து விட்டேன்.

பின் தொடர்ந்து மகளிருக்கான ராணுவப் பயிற்சிக்கு மெது மெதுவாக தெரிவான பெண்களை பின்தளத்திற்கு அனுப்பத் தொடங்கினோம். இந்தக் காலகட்டத்தில் எமது கழக தளநிர்வாகக் கூட்டம் மீண்டும் கூட ஆயத்தமானது. இந்நிலையில் நான் இக்கூட்டத்தில் நிறையவே பின்தள விடயங்களை மத்திய குழு உறுப்பினர் முன் கதைக்க இருந்தேன். தனிப்பட்ட நிலையில் அசோக், குமரன், ஈஸ்வரன், முரளி ஆகியோரிடம் உடன் உடன்பாடுகள் இருந்தாலும் எந்தப் பிரச்சனையையும் கையாளும் போதும் யாரும் யாரையும் நம்பத்தயாராக இல்லை. இதன் காரணங்களை பின்னாளிலும் இந்நாட்களிலும் அறிந்த போது எனக்குக் கிடைத்த விடை அல்லது தெளிவு.

**என் மீதான சில குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும்:**
நான் மகளீர் அமைப்பை மிக வேகமாக எனது தனிப்பட்ட ஓட்டத்தில் இழுத்துச் செல்வதாகவும், தாங்கள் மத்திய குழுவாக இருக்கும் போது நான் மேலிடத்துடன் நேரடித் தொடர்பை மேற்கொண்டு நேரடி விசுவாசத்தில் செயற்படுவதாகவும் மகளீருக்கான ராணுவப் பயிற்சி உட்பட்ட ஏனைய வேலைத் திட்டங்களையும் தங்கள் பார்வைக்குள் கொண்டு வரவில்லை என்பதுவும் மொத்தத்தில் எனது தன்னிச்சையான செயற்பாடுகள் என்மீதான சந்தேகங்களை உருவாக்கியதையும் குறிப்பிடனர். இன்றுவரையும் குறிப்பிடுகின்றனர்.

எனது தன்னிச்சையான செயற்பாடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் விமர்சனத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் அதற்கான காரணகர்த்தா இந்த மத்திய குழுதான் என்பதை இவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இன்றும் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். மத்திய குழு உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் எல்லோரும் தளநிர்வாகக் கூட்டங்களிலோ அன்றி தனிப்பட்ட சந்திப்புக்களிலோ கேட்ட சந்தேகங்களுக்கு இந்த மத்திய குழுவினரால் எந்தக் காலத்தில் என்ன சரியான பதில் சொல்லப்பட்டது? நானும் மற்றையவர்களும் மத்திய குழுவிடம் பொறுப்பாளர்களிடம் இவற்றையெல்லாம் கேட்டோம். பதில் கிடைக்கவில்லை என்றதும் மற்றையவர்கள் அப்படியே அதனை விட்டுவிட்டார்கள். ஆனால் நான் இன்னும் கொஞ்சம் தீவிரமாக இருந்து பின்தளத்திற்கு சென்று செயலதிபரிடமே கேள்விகேட்டேன் முரண்பட்டேன். பின்தளத்தில் முரண்பட்டாலும் எனது கழகம் என்ற வெறித்தனமான நம்பிக்கை என்னிடம் இருந்தது. அதனால் அமைப்புக்கு வெளியே விமர்சனத்தை நான் வைக்க விரும்பவில்லை. அப்படி வைத்தால் கழகத்தில் ஓட்டமும், உடைவும் தான் மிஞ்சும். எனது நியமனம் பின்தளத்தால் (ஜான் மாஸ்ரரினனால்) வழங்கப்பட்டாலும் எனக்கு பின்தளத்தை தட்டிக்கேட்க வேண்டிய உரிமையும் கடமையும் இருந்தது.

தட்டிக்கேட்ட எல்லோரையும் சர்ச்சைக்குரிய எல்லோரையும் சித்திரவதை செய்த படுகொலை செய்த புலனாய்வுப் பிரிவு எப்படி என்னை மட்டும் கேள்வி கேட்கவும் முரண்படவும் அனுமதித்தது என்பது எனக்குத் தெரியாது. சில சமயம் எனது குடும்பப் பின்னணி, சம்பந்தப்பட்டவர்களுடன் எனக்கு இருந்த தனிப்பட்ட நட்பு, கழகத்தின் மீது எனக்கிருந்த பற்றுதல், திருமலையை சேர்ந்தவள் (அந்த நேரம் திருமலையைச் சேர்ந்தவர் வெளியேற்றம் இருந்தது), ஒரு பெண், பார்த்தனின் மனைவி என்ற தகுதி என்பன என்னைப் பாதுகாத்து இருக்கலாம். அதற்காக நான் குற்றவாளியாக முடியுமா?

அத்தோடு நாட்டில் எனது செயற்பாடு தீவிரமாக இருந்ததால் எத்தனையோ ஆயிரக்கணக்கான உறவுகளை சம்பாதித்து இருந்தேன். அதனையும் விட நாட்டில் கூட ஏனைய இயக்கங்கள் கட்சிகள் பழைய நபர்கள் என்று பல தொடர்புகளை வைத்திருந்தேன். எனக்கு ஏதும் நடந்தால் எதிர்தாக்கம் கேள்விகள் எழுப்பப்படும் என்பது தலைமைக்கும் புரிந்து இருக்கும். மற்றும் எந்தக் கட்டத்திலும் விட்டுவிட்டு ஓடமுடியாத எனது தாய்வீடு கழகம் தான் என்ற விசுவாசம் தலைமைக்கும் நன்கு தெரியும். இதுவே என்னை பலரிடம் இருந்து அந்நியப்படுத்தி இருக்கலாம்.

இன்னும் தொடரும்…..

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - வரலாற்றுக் குறிப்புகள்**
**முன்னைய பதிவுகளுக்கு:**

கழக முக்கிய உறுப்பினர்கள் வெளியேற்றம்! சுழிபுரம் படுகொலைகள்! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 2 : ஜெ ஜென்னி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 1 : ஜெ ஜென்னி

நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! : நிலா (முன்னாள் கழகப் போராளி)

எழுத்தில் வல்லவன் எழுதுவது வரலாறு அல்ல! கண்ணாடிச் சந்திரன் உண்மையைத் தேட வேண்டும்! - கழக வரலாற்றுக் குறிப்பு: ராம் (தேசம்நெற் கருத்தாளர்)

பேராதனை கம்பஸில இருந்து ரொறன்ரோ - புளொட் இறக்கம்! தீப்பொறி இறக்கம்! மணியண்ணை ரைட் : பொறிமகன்

புலிகளின் கண்ணாடி விம்பமே புலிகளை வென்ற அரசு. - கேணல் கிட்டு மீதான கைக்குண்டுத் தாக்குதலும் அதன் எதிர்வினைகளும் : த ஜெயபாலன்

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (2)

www.tamilarangam.net

[தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (1)]

« இந்தியாவின் ஐம்பதினாயிரம் வீடமைக்கும் திட்டம் இழுபறி நிலையில். | Home |
யாழ்ப்பாணத்தில் மாணவி ஒருவரின் சடலம் தூக்கிட்ட நிலையில் மீட்பு. »

**Related posts:**

- Will be added soon here...
-

**உங்கள் கருத்து**

This entry was posted on Thursday, February 17th, 2011 at 10:45 am and is filed under கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ. You can follow any responses to this entry through the RSS 2.0 feed. You can leave a response, or trackback from your own site.

**11 Comments so far**

1. பிரதீபன்(ருபன்) on February 17, 2011 3:44 pm

   அன்பான வாசகர்களுக்கு ஜென்னி என்று அழைக்கப்படும் ரஜனி தான் காந்தியத்தில் இருந்ததாக கூறுவது முற்றிலும் போய் உண்மைக்கு புறம்பானது இந்த பெண்மணி தன்னை பெரிய ஆளாக காட்டுவதற்கு திரித்து கூறுகின்றார் சிங்கள காடையர்களால் மலையக மக்களை அடித்து விரட்டப்பட்ட போது அவர்களுக்கு ஜெயச்சந்திரனும் (ஜெயாஅண்ணை) நானும் சேர்ந்து திருகோணமலையில் எங்கள் காந்தீயத்தின் ஊடாக அவர்களை குடி அமர்த்தி அவர்களுக்கு புனர் வாள்வளித்தோம் அக்கால கட்டத்தில் சுந்தரண்ணை ஜான் மாஸ்ரர் வீட்டிற்கு வந்தவர் அப்போது ஜெயா அண்ணை என்னை யான் மாஸ்ரர் வீட்டிற்கு ஒருவர் வந்துள்ளார் என்று அழைத்து போனார் போய் பார்த்தல் அவர்தான் சுந்தரம் அவருடன் சிறிது உரையாடிய பின் அவர் ஜெயா அண்ணரிடம் என்னை வவுனியாவிற்கு அனுப்பும்படி கூறிவிட்டு சென்றுவிட்டார் நான் சிறிது நாட்கள் கழித்து வவுனியா சென்றேன் அங்கே சென்றதும் என்னை நெடுங்கேணி வெடிவைத்தகல் நாவலர் பண்ணைக்கு அனுப்பி வைத்தனர் அங்கு சில அண்ணன்மார் வருவார்கள் அவர்களை என்னுடன் எனது வீட்டிற்கு அழைத்து செல்லும்படி கூறியிருந்தார் காரணம் அவர்கள் ராணுவத்தால் தேடப்பட்டமை ஆனால் அவர்கள் அங்கு வரவில்லை நான் திரும்பி பன்குளம் சென்று விட்டேன் மூன்று நாட்கள் களித்து அவர்கள் அங்கு பன்குளம் வந்தார்கள் நான் அவர்களை முன்பு தெரிவுசெய்த இடத்திக்கு அழைத்து சென்றேன் வந்தவர்கள் பெயர் பாலமோட்டை சிவம் அற்புதம் கந்தசாமி செந்தில் இன்னும் சிலர் பின் சில மாதாங்களில் அற்புதம் ஒரு தாக்குதலில் இராணுவத்திடம் அகப்பட்டு விட்டார் இத்தனைக்கும் (சந்ததியார்) காந்தீயத்திற்கும் இயக்கத்திற்கும் மக்கள் தொடர்புக்கும் என்னை தான் பயன் படுத்தினார்கள் காரணம் நான் சிறுவன் மற்றும் மட்டகளப்பு சிறை உடைப்புக்கும் நான் பெரும் பங்காற்றினேன் இதை பாலமோட்டை சிவம் ஜான் மாஸ்ரர் அற்புதம் இவர்களிடம் கேட்டல் தெரியும் ஜான் மச்ரரிடமும் பாலமோட்டை சிவத்திடமும் உறுதிபடுத்தவும் ஜென்னி எப்போது இயக்கத்திற்கு வந்தா காந்தீயத்தில் இருந்தாவ இல்லையா என்று

2. T Sothilingam on February 17, 2011 9:31 pm

   ஜென்னி உங்களின் சுயவிமர்சனத்திற்க்கு மதிப்பளிக்கிறேன் போராட்ட ஆரம்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலங்களிலிருந்தே விமர்சனம், சுய விமர்சனம் என்பவைகள் சமமாக நடாத்தப்படாமல் போனது தவறுகளில் மிகவும் முக்கியமானது.

விமர்சனம் ஒருவர் பொது அமைப்பில் இயங்கும் போது, அந்த அமைப்பின் ஆரம்பத்திலிருந்தே அமைப்பின் ஒவ்வொரு உறுப்பினர்களாலும் விமர்சனத்தின் முக்கியத்துவம் குறித்த அறிவுடன் செய்யப்பட்டிருக்க வேண்டும். விமர்சனம் என்பது எந்தவொரு பொது அமைப்புக்கும் அது ஊர்களில் உள்ள வாசிக சாலையானாலும் சரி கோயில் நிர்வாக சபை என்றாலும் சரி பொதுவான அமைப்புக்களுக்கு இருக்க வேண்டிய ஒன்று, இந்த சமூக பொறுப்புணர்வு கொண்ட பக்குவத்தை சமூகத்தில் ஊன்ற வேண்டிய அவசியம் உள்ளது.

எந்த பொது அமைப்புகளில் இன்று இருப்பவர்களும் விமர்சனம் செய்யாது செயற்ப்படுவார்களானால் அந்த பொது அமைப்பும் தவறான வழிநடத்தலேயாகும் அப்படியான அமைப்புக்கள் மக்களுக்கு சரியாக சேவை செய்ய (செயற்பட) முடியாத அமைப்பாகவே இருக்கும்.

ஜென்னி உங்களின் விமர்சனங்களில் சிலரை அவர்களது பெயரை திடீரென புகுத்துகிறீர்கள் அந்த இடத்தில் புளொட் அமைப்பு சாராதவர்களால் இவர் யார் என்று விளங்கிக்கொள்வது சிரமாக உள்ளது. ஒரு இடத்தில் மிக சரியாக குறிப்பிட்டீர்கள் எஸ் ஆர் இன்றய புளொட் இணைப்பாளர் என்று இந்த விடயத்தில் கவனம் எடுப்பது நன்று மிகவும் முக்கியமானது. இந்த விமர்சனத்தின்போது சிலவிடயங்களை தவிர்க்க வேண்டியும் ஏற்படலாம் காரணம் இந்த விமர்சனத்தில் (பொது இடத்தில்)சில விடயங்களை சொல்லுவதால் இன்று அவர்களது வாழ்விற்க்கு பாதிப்பு ஏற்படும் என்றால் தவிர்ப்பது முக்கியமானது (வாழ்வதே முக்கியம்) விமர்சனத்தின் சிலவிடயங்களை புளொட் அமைப்பிற்கு வெளியே சொல்ல முடியாத சந்தர்ப்பங்களையும் கவனத்தில் எடுக்கவும் (அமைப்பினுள்ளே மட்டும் பேச வேண்டிய விடயங்கள் என்ற சில விடயங்கள் உண்டல்லவா இன்று புளொட் என்ற அமைப்பு மக்கள் மத்தியில் இயங்குகின்றது என்பதையும் கவனத்தில் கொள்ளுவது விமர்சன பக்குவத்துக்கு முக்கியமானது. (விமர்சன தார்ப்பரியம் இதனை ஏற்றுக்கொள்ளும்)

இப்படியான விமர்சனங்களின் பின்னர் புளொட் அமைப்பு மீண்டும் மக்கள் மத்தியில் சுயாதீனமாக தனது தவறுகளை விமர்ச்சித்துக்கொண்டு தொடர்ந்தும் மக்கள் அமைப்பாக செயற்பட்டு பெருமளவிலான மக்கள் ஆதரவினைப் பெறும் என நம்புகிறேன்.

மீண்டும் மீண்டும் புதிய புதிய அமைப்புகள் மக்கள் மத்தியில் தோன்ற வேண்டிய அவசியமில்லை மக்கள் மத்தியில் உள்ள அமைப்புகள் தம்மை விமர்சித்து தமது தவறுகளை திருத்திக்கொண்டு மக்கள் மத்தியில் மீண்டும் உறுப்பினர்களையும் ஆதரவினையும் உள்வாங்கி செயற்ப்பட முடியும்.

இன்று உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் ஏன் முன்னாள் புளொட் உறுப்பினர்கள் மீண்டும் தமது அமைப்பினருடன் இணைந்து விமர்சனங்களை செய்து கொண்டு புதிய நிர்வாக கட்டமைப்புக்களை உருவாக்கி மக்களுக்காக செயற்ப்படும் சந்தர்ப்பங்களை உருவாக்கலாம் அது சிறப்பானது என நான் கருதுகிறேன்.

ஜென்னியின் சுய விமர்சனம் தமிழர் சமூகத்தில் மிக நல்ல முன் உதாரணம்.

3. பல்லி on February 17, 2011 9:59 pm

நண்பர்களுக்கு என் மன்னிப்பை சொல்லி பிரதீபனுக்கு பதில் சொல்ல வேண்டிய தேவைக்கு பல்லி கீழே தள்ளப்பட்டு விட்டேன், காரனம் இவரின் உறுப்பில் ஒன்றான கை என்னையும் கொழும்பில் பதம் பார்த்தது; இவர் தன்னை தானே ஒரு விடுதலை குடும்பம் என சொன்னாலும் அதில் உன்மை மிக குறைவே, இவர் தன்னை வளர்க்க தனது


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடும்பத்தை இலங்கை ராணுவம் அழித்தது என கதைவிட்டு அதை வைத்தே பிழைப்பு நடத்தும் ஒருவர்; ஆனால் இவருக்கு ஒரு சகோதரம் பிரான்ஸ்சிலும் இன்னொருவர் இன்னொரு நாட்டிலும் உள்ள உன்மை பலருக்கு தெரியாது; இவருக்கு கழக பெயர் ஊத்தை பிரதீபன் என்பதே, இது எனது தனிப்பட்ட பழிவாங்கல் எனில் கண்டிப்பாக நான் எழுத மாட்டேன், ஆனால் புலம்பெயர் தேசத்திலும் புலிக்கு நிகராய் இவர் செய்த அடவாடி பல; இவர் பரிஸ்சில் வாழ்ந்து அங்கு புலிகளால் மிக இதமாக பதபடுத்தபட்டு லண்டன் வந்த செய்தி பலர் அறிந்ததுதான், ஜென்னி சரியோ தவறோ எனக்கு தெரியவில்லை; ஆனால் பிரதீபன் என்பவர் ஒரு குப்பை என்பதை நான் மிக தெளிவாக உறுதி படுத்துகிறேன், இது கோபமல்ல யாரும் எதுவும் எழுதலாம் என்பதை அதுவும் தேசத்தில் என்னால் ஏற்க முடியவில்லை, (பல்லி ஏதாவது கடும் வார்த்தை பாவித்து இருந்தால் என்னை நண்பர்கள் மன்னிக்கவும்) இது ஜென்னிக்கான பாதுகாப்பல்ல பிரதீபனுக்கான கண்டனம்;

4. இரவி சங்கர் on February 18, 2011 8:39 am

சுழிபுரம் படுகொலைகளை நடாத்திய (டம்பிங்) கந்தசாமியின் அணியின் வட்டுக்கோட்டையைச் சேரந்து வசந்தி (ஆண்) என்ற போராளியும் இருந்ததாக அறிகிறேன். வசந்திக்கும் இந்த கொலைகளில் பங்கு இருக்கிறதா?

1989ம் ஆண்டு மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் கந்தசாமியின் முகாம் ஒன்றை புலிகள் தாக்கியளித்தபோது கந்தசாமியுடன் வசந்தியும் அங்கு இருந்துள்ளார்.

5. vetrichelvan on February 18, 2011 10:59 am

"கழகத்தின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் சுழிபுரம் முக்கியமானது. சந்ததியார், சுந்தரம், தடியன் ரவி, மொக்கு மூர்த்தி (சுழிபுரம் என்றே நினைக்கிறேன்.), செங்கோடன், சாமி (சந்ததியாரின் மருமகன்), கந்தசாமி, ஆச்சிராஜன் (உமா மகேஸ்வரனின் படுகொலையைத் திட்டமிட்டவர். கடந்த ஆண்டு இயற்கை மரணத்தை தழுவினார்.), ஆர் ஆர்(தற்போதைய புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்) ஆகியோர் சுழிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களே." உமா மகேஸ்வரனின் கொலையை ஆச்சிராஜன் திட்டமிடவில்லை. 1989ல் கழகம் முடிவு செய்ததை, ஆச்சிராஜன் இடம் கொலைக்கு பொறுப்புதான் கொடுக்கப்பட்டது

6. Ajeevan on February 18, 2011 11:09 am

//சுழிபுரம் படுகொலைகளை நடாத்திய (டம்பிங்) கந்தசாமியின் அணியின் வட்டுக்கோட்டையைச் சேரந்து வசந்தி (ஆண்) என்ற போராளியும் இருந்ததாக அறிகிறேன். வசந்திக்கும் இந்த கொலைகளில் பங்கு இருக்கிறதா? - இரவி சங்கர் //

இரவி சங்கர், நீங்கள் குறிப்பிடும் நபர் வசந்தி அல்ல வசந்தன் என்கின்ற தனபாலசிங்கம். இவர் கழகத்தில் இணைந்தது முதல் 1987 வரை புளொட்டின் படுகொலைகளை எதிர்த்து பேசிவர். புளொட் சமூக விஞ்ஞானக் கல்லூரியில் (T3S) பயின்றதோடு புளொட்டின் பிரசார பிரிவில் இருந்தார். கழக கொலைகளை எதிர்த்து குரல் கொடுத்து , சங்கிலி கந்தசாமியோடும் முரண்பட்டவர். இவருக்கும் சுழிபுரக் கொலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

இவர் 1987க்கு பின்பு உமாமகேஸ்வரனின் பணிப்பின் பேரில் தமிழ்நாட்டில் நடந்த கொலை, கொள்ளைகளுக்கு இவரே தலைமை தாங்கினார். இயக்கம் கொள்கை கொள்கை என்றது இந்த கொள்ளைகளைத்தான் என நினைக்கிறேன். நாம் தவறாக விளங்கியிருந்தோம். இப்போது பலருக்கு விளங்கியிருக்கிறது?

இது குறித்து ஏற்கனவே வானவில் என்பவர் வேறொரு தலைப்பில் பதிவு செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

7. j.jenney on February 21, 2011 8:18 am

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ரவி, /"ஜென்னி. பீலிக்ஸ் பற்றிய தகவல்களிற்கு நன்றி. சந்ததியார் என்ற உன்னதமான மனிதனுடன் பழகியிருக்கிறீர்கள். அவரின் மரணத்திற்கு பின்பும் நீங்கள் முகுந்தனின் தலைமையிலான புளொட்டில் இருந்ததற்கான காரணத்தை கூற முடியுமா""/

ரவி, பல்லி உட்பட்ட பலரின் சந்ததியார் பற்றிய கேள்விக்கும், சந்தேகங்களுக்கும் எனது பார்வையில் சிறு விளக்கம்:

நான் இந்தியாவிற்கு முதலில் வந்ததும் சென்னையில் நிற்கும் போது சந்ததி அண்ணாவை சந்திக்க மிக ஆவலாய் இருந்தேன். முடியவில்லை. பின் இவரை 1984 மே மாதம் முதலாம் திகதி பார்த்தனின் நினைவு அஞ்சலியிலும், பின் அதே மாதத்தில் கடைசிப் பகுதியிலும் சென்னையில் வைத்து சந்தித்ததே எனது கடைசி சந்திப்பு.

1983ற்கு முற்பட்ட காலத்தில் காந்தியத்திலும் பின் அரசியலிலும் சந்ததி அண்ணாவால் ஒரு சமூகப் போராளியாக, ஒரு விடுதலைப் போராளியாக நான் உருவாக்கப் பட்டதற்கும் இந்த சென்னையில் இவரை சந்தித்த கடைசி இரு சந்திப்பின் போதும் இவரிடம் காணப்பட்ட மனேநிலை எனக்கு இன்றும் மிக குழப்பகரமாகவே உள்ளது.

ஏனெனில் 1983ற்கு முற்பட்ட காலங்களில் பல மாவட்டங்களிலும் பல ஆயிரக்கணக்கான மக்களை வென்றெடுத்து பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை (பெண்கள் உட்பட) மக்கள் போராட்டத்தில் படிப்படியாக ஈடுபடுத்தியவர். எமது மக்கள் போராட்டத்தை காந்தியத்தினுடாக கழகத்தின் ஆணிவேராக இருந்து வளர்த்தெடுத்தவர் என்பதை எனது நிலா என்ற முகத்தினூடும் ஜென்னி என்ற பதிவுகளோடும் பகிர்ந்து கொண்டுள்ளேன். இந்நிலையில் கடைசியாக சந்ததி அண்ணாவை சந்தித்த இந்த இரு நிகழ்விலுமே அவரின் வார்த்தைகள், பகிர்வுகள் இதுவரை அவரிடம் நான் பார்த்த விடுதலையின் உத்வேகத்தை காணமுடியவில்லை. மாறாக எமது மக்களின் விடுதலை கேள்விக்குறியானதோ என்ற தோரணையிலும், ஒரு அவநம்பிக்கையுடனான வெளிப்பாடுடனே இருந்தது. ஆயினும் இந்த கடைசி இரண்டு சந்திப்பின் போதும் நானும் மிக சங்கடங்கள் ஜெயாவின் இழப்பின் நிமித்தம் துவண்டு போயிருந்த நேரம். இந்நிலையில் சந்ததி அண்ணாவின் போக்கு எனக்கு உறுத்தலாக இருந்ததை இன்றுவரை எண்ணிப்பார்க்க முடிந்தாலும் அவரை நோக்கிய எனக்கு சில உரிமைகள் இருந்தும் அன்று அவரை அணுகி கேட்கக் கூடிய மனோநிலையிலோ துணிவிலோ நான் இருக்கவில்லையென உணர்கின்றேன்.

பின்னால் எனது கணிப்புக்கள், சம்பவங்களைப் பார்க்கும்போது ஒரு சில விடயங்கள் சந்ததி அண்ணாவின் பக்கங்களில் புரிகின்றது.
1)நான் மேலே குறிப்பிட்டதுபோல் சந்ததியார் மக்கள் போராட்டத்தை மிக திட்டமிட்ட வரையறுக்கப்பட்ட கட்டுமாணத்தில் முன்னெடுத்த அதுவும் மக்கள் மத்தியில் அதாவது எமது பிரதேசத்தில் வைத்தே நகர்த்த வேண்டும் என்பதில் என்றும் குறிக்கோளாக இருந்தவர். இந்த நேரத்தில் சிறிலங்கா அரசால் காந்தியத்தினது அழிப்பும் டாக்டர் ராஜசுந்தரம், டேவிட் ஐயா உட்பட்ட பல முக்கியஸ்தர்களின் கைதுகளும் கொலைகளும் அதைத் தொடர்ந்து வெலிகடை படுகொலையும், மட்டக்களப்பு ஜெயில் பிரேக், இனக்கலவரம் என மக்கள் போராட்டத்தையும் தாண்டி ஆயுதப் போராட்டம் வேகப்படுத்தப்பட்டு நகர்த்தப்பட்ட விதமும் அதனைத் தொடர்ந்து வரையறை அற்ற விதத்தில் எமது போராட்டம் அசாதாரணமாக வீங்கி முட்டிபெருத்து தவிர்க்க முடியாமல் ஆயிரக்கணக்கானோரை உள்வாங்க வேண்டிய நிலைமையும் தவிர்க்க முடியாத பாய்ச்சல் ஒன்றானது.

2)இந்நிலையில் அந்நிய நாடொன்றினை (இந்தியா) நம்பி எமது போராட்டம் நகர்ந்தது மட்டுமல்லாமல் முழுக்க முழுக்க அவர்களில் தங்கியிருக்க வேண்டிய பல சூழலில் எமது போராட்டம் மாட்டிக் கொண்டதனையும் எண்ணியிருக்கலாம். காரணம் சந்ததி அண்ணா 'வங்கம் தந்த பாடம்" என்ற கோட்பாட்டை எமது போராட்டத்துடன் ஒப்பிட்டு பார்த்தது புலனாகின்றது.

3)மேலும் இந்தியாவில் நிலைப்பட்ட எமது போராட்டம் சடுதியான தீவிர பயிற்சிகளிலும், ஆயுத கொள்வனவு உட்பட்ட அத்தனை ஆயுத நகர்வுகள், பாதுகாப்புகளுடன் மக்கள் போராட்டத்திலிருந்து தடம்புரண்டு ஆயுதப் போராட்டத்தின் போக்கு கூர்மையடைந்த நிலையில் கழகத்தின் தலைமைப் பீடமும் ஒரு போராட்ட அமைப்பில் அதன் கட்டுமாணத்தில் ராணுவத்தின் செயற்பாடுகளும் அரசியல் செயற்பாடுகளும் ஒன்றுக்கொன்று ஈடாக வளர்க்கப்படாமல் அரசியல் வகுப்புக்கள் அல்லது அரசியல் சார்ந்த (அந்நேரம் சந்ததியார் தான் அரசியல் துறைச்செயலராக இருந்தவர்) முன்னெடுப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டது அல்லது முடக்கப்பட்டதான செயற்பாடுகள் கழகத்தில் கட்டுப்பாட்டுக் குழுவென்ற முக்கிய அங்கத்திலிருந்த சந்ததியார் அவர்களுக்கான ஒரு அரசியல் நெருக்கடியை கொடுத்துள்ளமையும் காணக்கூடியதாக தெரிகின்றது. எனவே பின்தள நகர்வுகளில் பதவிப்போட்டி, குழிபறிப்புக்கள், சந்தேகங்கள் (இதில் சந்ததியாரின் வெற்றிடத்தை நிரப்பிய பின்நாள் கழகத்தின் அரசியல் துறைச்செயலரான வாசுதேவாவின் பாத்திரம் குறிப்பிடத்தக்கது) என்ற அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகள், ராணுவ மேலோங்களினால் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது அல்லது அழிக்கப்பட்டிருக்கின்றது.

4)இந் நிலையில் சந்ததியார் தன்னால் அடித்தளமிடப்பட்டு உருவாக்கப்பட்ட கழகம்,தன்னால் உள்வாங்கப்பட்ட பலர் தலைமைப்பீட தனிவிசுவாசத்துடன் பின்னிப்பிணைந்து ராணுவ ரீதியான அடவாடித்தனமான குழுவாக இயங்கும் நிலையில் தான் எதைச் சொன்னாலும் இனி ஏற்று ஆய்வுசெய்யக்கூடிய நிலையில் கழகம் இல்லையென்பதும், உமாமகேஸ்வரன் தன்னைச்சுற்றி வளர்த்து வைத்திருந்த கழகத்தின் விசுவாசிகள் என்ற துதிபாடிகளை ஒரு கட்டத்திற்கு மேல் கண்டிக்கமாட்டார் எனத் தெரிந்ததும் சென்னையில் மௌனமாக இருந்துள்ளார்.

நாட்டில் மக்கள் மத்தியில் அடிப்படை மாற்றத்திற்கு மக்களையும் இளைஞர்களையும் ஈடுபடுத்தி செயற்பட்டதற்கும் இந்தியாவில் கழகத்தின் முற்றுமுழுதான ராணுவ நகர்வுகளுக்கும் இவரால் அல்லது கழகத்தின் அடிப்படைத் தத்துவத்தால் ஈடுகொடுக்க முடியாமல் போனமையே அதாவது ராணுவமும் அரசியலும் ஒன்றையொன்று ஒரே தளங்களில் அனுசரித்தோ சமப்படுத்தப்பட்டோ போகாமையே சந்தியார் முதற்கொண்டு பலர் வெளியேற்றம், தளம் -பின்தளம் என்ற முரண்பாடுகள் தோற்றிவிக்கப் பட்டதற்கும் காரணமென எனக்கறிந்த வரையில் உணர்கின்றேன்.

இந்த சந்ததியாரின் மௌனம் பற்றி நேற்றுக்கூட பழைய நண்பர் ஒருவரிடம் பேசும் போது எங்களையெல்லாம் உருவாக்கிவிட்ட சந்ததியார் ஏன் பின்தளத்தில் முரண்பட்டபோது நாட்டிற்கு திரும்பி வந்து மக்கள் மத்தியில் உண்மையை புரியவைத்து தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கவில்லை என ஒரு கேள்வியும் வந்தது. ஆனால் அன்றைய யதார்த்தத்தில் பார்த்தால் இந்தியா எல்லா இயக்கத்திற்கும் தந்த ஆதரவும் அனுசரணையும் நகர்வுகளும் எமது மக்களுக்கான விடுதலை இலங்கை அரசை ராணுவரீதியாக வெற்றிகொள்வதிலேயே நம்பிக்கைதான் பரவலாக மக்கள் மத்தியிலும் போராளிகள் மத்தியிலும் இருந்தது. இதில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்து அந்நேரம் நாட்டில் அரசியலை மட்டும் முன்னெடுப்பது சாத்தியமா என்பது கூட யோசித்திருக்கலாம். மேலும் தனது உயிருக்கு கழகத்திற்குள்ளும் கழகத்திற்கு வெளியேயும் உத்தரவாதம் இல்லை என்பதையும் உணர்ந்திருக்கலாம் என இப்படியெல்லாம் இன்று சிந்திக்கின்றோம்.

மேலும் ரவி போன்றோரின் கேள்விக்கு பதிலாக பார்த்தால்:
நான் என்றும் இந்த மக்கள் சக்தியை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட கழகம் உமா மகேஸ்வரனுக்குத்தான் உரித்தானதென நான் என்றும் நினைக்கவில்லை. நிலா என்ற பதிவினிலே சந்ததியாரின் உழைப்பு உருவாக்கம் தான் இந்த கழகம் என்பதை பல ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தி உள்ளேன். இதில் கழகத்தில் சந்ததியாரால் உமாமகேஸ்வரன் உள்வாங்கப்பட்ட காலத்தையும் குறிப்பிட்டுள்ளேன். இதை வரலாற்றில் யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

www.tamilarangam.net

இந்நிலையில் சந்ததியாரைப் போன்றோரால் மக்கள் போராட்டத்தை மையப்படுத்தி வளர்க்கப்பட்ட நாம் எதனையும் விட்டுப்போக முடியாத மனோநிலையில் இன்றும் இருக்கின்றோம். எனக்கே இந்த உணர்வு இருக்குமானால் சந்ததியார் ஏன் இயக்கத்தை விட்டு வெளியேறி எதிர்ப்பிரச்சாரம் செய்யவில்லை என்பதுவும் தெரிகின்றது. இப்படியான பல காரணங்களால் இயலாத ஒருநிலையில் சென்னையிலேயே ஒதுங்கியிருந்தாரே ஒழிய ஓடவில்லை. இவரின் மௌனத்தையும் சக்தியையும் கண்டு பயத்தில் கழகத்தின் தலைமைப் பீடமும் அதனைச் சுற்றியிருந்த உமாமகேஸ்வரனின் துதிபாடிகளும் இவரைக் கொலைசெய்தமையே கழகத்தின் அடித்தளம், அத்திவாரம் எல்லாம் ஆட்டம் கண்டது.

ஆனால் இப்படியான பல கொடுரங்களை கண்டு ஓட எனக்கு மனம் வரவில்லை சந்ததியார் போன்ற எத்தனையோ ஆயிரம் பேரின் அர்ப்பணிப்பு - தியாகம் - உழைப்பு - கனவு இதற்குள் சங்கமித்து இருப்பதால் இது எனது கழகம் என்ற வெறித்தனமான பற்று என்னுள் இவர்களைப் போன்றோரால் வளர்க்கப்பட்டு வந்ததால், மேலும் வெளியேறி ஒன்றும் சாதிக்க முடியாது உள்ளேயிருந்து போராடுவோம் என்ற அசாத்திய துணிச்சல் என்றும் இருந்ததால் என்னிலிருந்து கழகத்தை என்னால் பிரித்து பார்க்க முடியவில்லை

8. j.jenney on February 21, 2011 8:25 am

சூர்யா! நீங்கள் தேடும் ராதாகிருஸ்ணன் இவரில்லை.
எனது பதிவில் ராதாகிருஸ்ணனைப் பற்றி எனது முதலாம் இரண்டாம் பதிவுகளில் விபரமாக கூறி வருகின்றேன். தயவு செய்து ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு பாத்திரத்தையும் கவனமாக அவதானிக்கவும். ஏனெனில் பின்னால் வரும் முக்கிய பகுதிகள்- சாட்சிகளுடன் இவர்கள் அனைவரும் ஏதோ ஒருவிடயத்தில் சம்பந்தப்பட்டருப்பார்கள். இவருக்கான முக்கிய சம்பவம் ஒன்று எனது மூன்றாம் பகுதியில் வெளியாகும் என நினைக்கின்றேன்.

இந்த ராதாகிருஸ்ணன் திருகோணமலையை சேர்ந்தவர். நான் முதலே குறிப்பிட்டபடி 1980களில் திருகோணமலையில் சந்ததியாரால் பார்த்தன் உட்பட இந்த ராதாகிருஸ்ணன் - ஜெயகாந்தன் (இருவரும் லண்டனில் இருப்பவர்கள்) மற்றும் ஜான்மாஸ்ரர், இன்னும் பல இளைஞர்கள் காந்தியத்தினூடாக கழகத்தில் உள்வாங்கப்பட்டவர். பின்நாளில் ரகு என்ற பெயரில் கழகத்தில் அம்பாறை மாவட்ட பொறுப்பாளராக கழகத்தில் எம்மைப்போல் கடைசிக்காலம் வரை (கழகத்தில் ஆயிரம் பிழையிருந்தாலும் விட்டுப்போக முடியாத மனப் போராட்டங்களுடன் பல உயிர் அச்சுறுத்தல்களுடன்) கழகத்தில் இருந்தார். இன்று கூட அவருடன் தொடர்பில் இருக்கின்றேன். இந்த பதிவில் இவர்களைப் போன்றோரின் நினைவுப் பதிவுகளுடனும் கலந்துரையாடல்களுடனும் தான் இவற்றை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றேன்.

எனவே முகம் தெரியாத எத்தனையோ ஆயிரம் பேர் இப்பதிவுகளை கவனிக்கும்போதும் கால் நூற்றாண்டைக் கடந்தும் பல சம்பவங்கள் கண்முன்னே கொண்டுவரும் போது உங்களைப் போன்றோரின் தேடல்கள் வருவது சாத்தியமானதே. எனவே நியாயமான உங்கள் தேடல்களுக்கு என்னால் எப்போதும் முடிந்தவரை பதில் கொடுக்க வெண்டியது எனது கடமை. உங்கள் தேடலுக்கு எமது நன்றிகள்! நீங்கள் தேடும் ராதாகிருஸ்ணன் கழகத்தில் இருந்திருப்பாரானால் கண்டிப்பாக யாராவது சரியான தகவல் கொண்டு வருவார்கள் காத்திருப்போம்.

9. prof on February 23, 2011 11:42 am

2)இந்நிலையில் அந்நிய நாடொன்றினை (இந்தியா) நம்பி எமது போராட்டம் நகர்ந்தது மட்டுமல்லாமல் முழுக்க முழுக்க அவர்களில் தங்கியிருக்க வேண்டிய பல சூழலில் எமது போராட்டம் மாட்டிக் கொண்டதனையும் எண்ணியிருக்கலாம். காரணம் சந்ததி அண்ணா 'வங்கம் தந்த பாடம்" என்ற கோட்பாட்டை எமது போராட்டத்துடன் ஒப்பிட்டு பார்த்தது புலனாகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்திய நிலைப்பாடும் இந்தியாவில் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டம் இன்னும் தங்கிருப்பது பற்றி ஜென்னி உங்களின் நிலைப்பாடு என்ன?

இந்தியாவால் தான் எல்லாம் முடியும் என்று இன்றும் நம்பிக்கொண்டிருக்கும் ஈ என் டி எல் எவ் இன் அமைப்புடன் தொடர்பில் உள்ள உங்களின்நியாயம் என்ன?

புளொட்டில் எனது சாட்சியம் என்ற உங்களின் பதிவுடன் சேர்த்து ஈ என்டி எல் எவ் இன் இந்திய இராணுவ கால பாத்திரத்தையும் எழுதுவீர்களா?

ஈ என் டி எல் எவ் புலிகளில் இருந்து பிரிந்த கருணாவுடன் கூட்டமைத்தது தொடர்பாக எழுதுவீர்களா?

ஈ என் டி எல் எவ் கருணாவுடன் கூட்டமைத்திருந்த காலத்தில் நடந்த TRO ஊழியர்கள் படுகொலை; பரராஜசிங்கம், சந்திர நேரு போன்றோரின் படுகொலைகள் பற்றியும் உங்களின் நிலைப்பாட்டை எழுதுவீர்களா?

கருணாவுடன் கூட்டுச்சேர்ந்திருந்த காலத்தில் ENDLF இன் வானெலியான TBC சிறிலங்கா ஒலிபரப்பு கூட்டுதாபனத்தின் அலைவரிசையில் TBC புலிகளுக்கு எதிராக அரசாங்கத்துடன் சேர்ந்து பிரச்சாரம் செய்ததை எப்படி பார்க்கின்றீர்கள்?

10. ganendran on February 24, 2011 3:09 pm

வெற்றிச்செல்வன் 89இல் யார் யார் முடிவெடுத்தது ஆச்சிராஜனுக்கு கொலைக்குரிய பொறுப்பைக் கொடுத்தது யார் என்பதையும் ஏன் மறைக்கிண்றீர்கள்.

11. j.jenney on February 27, 2011 3:14 pm

இந்த எனது இரண்டாம் பதிவில் முதலாவது பின்னோட்டமாக பிரதீபன் என்ற ரூபனின் உள்ளக்குமுறலை அறிந்தேன். இவர் குறிப்பிட வந்த விடயத்தை விட்டு என்னில் சேறுபூச முற்பட்டதை பார்த்து…
எனினும் பல்லி சில நிமிடங்களிலேயே பிரதீபனின் ஒருபக்க முகத்திற்கான பதிலை கொடுத்திருந்தார். பல்லியைப் போன்றோர் குறிப்பிடுவது போன்று எல்லா புறணிகளுக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என உணர்கின்றேன். ஆயினும் பிரதீபனும் இத் தளத்தில் இறங்கி தனது கருத்தை வெளியிட்டமைக்கு நன்றி கூறிக் கொண்டு அவருக்கான சில விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றேன்.

பிரதீபனின் கழகத்தினாலான பங்கை என்றும் நான் மறைக்கவில்லையே!
கடந்த எனது நிலா என்ற பின்னோட்டங்களிலும் சரி, நிலா என்ற கட்டுரையிலும் சரி, விபரமாக குறிப்பிட்டுள்ளேன். தயவுசெய்து அந்தப் பதிவுகளில் உங்கள் பாத்திரங்களை தேடிபாருங்கள் அதில் பிழையிருந்தால் குறிப்பிடுங்கள். நிலாவில் காந்தியத்தினூடாக கழகம் எப்படி உருவகிக்கப்பட்டது என்பதில் உங்களின் பாத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசம் நிர்வாகம் கேட்டதற்கிணங்க ஜென்னி என்ற பதிவினூடாக கழகத்தின் பங்களிப்பில் என்மீதுள்ள விமர்சனங்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் நான் எனது இந்த பதிவை நகர்த்தியுள்ளேன். அதில் உங்கள் பாத்திரம் இதில் சம்பந்தப்படவில்லை.
ஆயினும் உங்களுக்கு சில குறிப்புக்கள்:
பார்த்தன் என்ற ஜெயாவோடு நீங்கள் மட்டுமல்ல ஜான்மாஸ்ரர் (கனடா), ஜெயகாந்தன், ராதாகிருஸ்ணன், நந்தன் (இவர்கள் உட்பட நீங்களும் லண்டனில் இருப்பது மட்டுமல்ல, சந்தியார் மூலம் திருமலையில் கொண்டுவிடப்பட்ட செழியனும் இன்னும் பலரும் இருப்பதுவும் எனக்குத் தெரிந்ததே. அதிகமாக எம் ஒவ்வொருவருக்குமான கழகம் அல்லது காந்தியம் சார்ந்த தனிக்கதைகளும் இழப்புக்களும் நிறையவே உள்ளது. நீங்கள் பார்த்தனின் பொறுப்பிலிருந்த பன்குளம் பண்ணையில் (பறையனார்குளம் என்ற இடம் என நினைக்கின்றேன்) செயற்பட்டதும் காந்தியத்தில் நீங்கள் குறிப்பிட்ட மாதிரி சிறு பையனாக

அரைக்காற்சட்டையுடன் ஓடித்திரிந்ததும் எமக்குத் தெரியும். அதுபோல் 1983 இனக்கலவரத்தில் உங்களின் குடும்பத்தில் அதிகமானோர் கொல்லப்பட்டதும் தற்போது பாரிசிலுள்ள தம்பி வரதன் (இவர் இங்குள்ள கழகத்தில் உள்ளார். நேற்றும் அவரை வழியில் எதிர்பாராமல் சந்தித்து சிநேகபூர்வமாக உரையாடினேன். உங்களைப் போலன்றி உங்களுக்கு எதிர்மறையான நிதானமான ஒரு சிறந்த சகோதரர். இதனை உங்களுக்கும் அவருக்கும் பலதடவை பல பேர் முன்னிலையில் குறிப்பிட்டுள்ளேன்) இருப்பதுவும் ஒரு சகோதரியும் நல்ல நிலையில் இருப்பதுவும் தெரிந்ததே.
நீங்கள் கழகத்தில் இருந்ததுவும் தற்போது கூட கழகத்தில் இருப்பதுவும் தெரிந்ததே. ஆனால் கழகத்தில் நீங்கள் மட்டும் தான் அன்றும் விசுவாசி இன்றும் நான் தான் விசுவாசி என்பதை விடுத்து எல்லோரும் இனியாவது உண்மைகளை பேச முற்பட்டுள்ளோம்.

Name (required)
சீலன்

Email (required)
thavaguru22@gmail.com

Website

உங்கள் கருத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்
English பாமினி உச்சரிப்பு

அனுப்புக

வகைகள்.: லண்டன் குரல் (65) பார்
எழுதுபவர்கள்.: பாலச்சந்திரன் எஸ் (1) பார்

**பழயவை**

- February 2011 (171)
- January 2011 (191)
- December 2010 (172)
- November 2010 (259)
- October 2010 (293)
- September 2010 (293)
- August 2010 (335)
- July 2010 (328)
- June 2010 (334)
- May 2010 (284)
- April 2010 (229)
- March 2010 (239)
- February 2010 (266)
- January 2010 (222)
- December 2009 (345)
- November 2009 (342)
- October 2009 (407)